செய்தி வெளியீடு எண்: 459 நாள்: 22.09.2016

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 21.9.2016 அன்று தலைமைச் செயலகத்தில், மருத்துவக் கல்வி பயிலும் மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் புரட்சித் தலைவி அம்மா Best Charitable Trust மூலமாக 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 5 தொகுப்பு M.B.B.S. மருத்துவப் படிப்பிற்கான புத்தகங்களையும், நமது எம்.ஜி.ஆர். Best Charitable Trust மூலமாக 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 5 தொகுப்பு M.B.B.S. மருத்துவப் படிப்பிற்கான புத்தகங்களையும், அரசு மருத்துவக் கல்லூரி நூலகங்களின் பயன்பாட்டிற்காக மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களிடம் வழங்கினார்கள்.

எந்த ஒரு மாணவ, மாணவியும் கல்வி பயில்வதற்கு நிதி ஒரு தடையாக இருக்கக் கூடாது என்ற தொலைநோக்கு சிந்தனையுடன், தாயுள்ளத்துடனும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அறக்கட்டளை வாயிலாக கல்வி கற்க வசதியில்லாத ஏழை எளிய மாணவ மாணவிகளுக்கு கல்வி கற்பதற்காக நிதியுதவி வழங்கி வருகிறார்கள்.

அந்த வகையில், அரசு மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் நமது எம்.ஜி.ஆர். Best Charitable Trust மூலமாக 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 5 தொகுப்பு M.B.B.S. மருத்துவப் படிப்பிற்கான புத்தகங்களும் மற்றும் புரட்சித் தலைவி அம்மா Best Charitable Trust மூலமாக 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 5 தொகுப்பு M.B.B.S. மருத்துவப் படிப்பிற்கான புத்தகங்களையும், திருவாரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் ESIS மருத்துவமனை, சென்னை, தமிழ்நாடு அரசு பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை ஆகிய அரசு மருத்துவக் கல்லூரி நூலகங்களின் பயன்பாட்டிற்காக 4 ஆண்டு M.B.B.S. மருத்துவப் படிப்பிற்கு தேவையான

அனைத்து புத்தகங்களும் அடங்கிய 10 தொகுப்பு புத்தகங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களிடம் வழங்கினார்கள்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் முனைவர் பா. இராம மோகன ராவ், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு) ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை –9.**
**நாள் : 22.9.2016**